# சினிமா



விமர்சனம்

## குருவி

அண்மையில் ‘குருவி’ படத்தைப் பார்த்து ‘ரசிக்கும்’ பெரும் ‘பாக்கியம்’ கிடைத்தது.

கதை என்னவென்றால் விஜயின் அப்பா மணிவண்ணன் ஆந்த்ரா மாநிலத்தில் ஒரு கல் உடைக்கும் குவாரியில் கல் உடைக்கும் போது அதில் வைரம் இருப்பதை கண்டு அரசுக்கு சொல்ல முயற்சிக்க அதை வில்லன் கும்பல் சுமன் ஆஷிஷ் வித்யார்தி அவர்களை அடிமையாக்கி வெளியுலகிற்கு தெரியாமல் அடைத்து வைத்து அவர் களை வேலை வாங்குகிறார்கள், அதோடு அந்த வைரத்தை விற்று கோடிகளில் சம்பாதிக்கிறார்கள் இதை விஜய் எப்படி கண்டுபிடித்து மணிவண்ணனையும் அவரோடு அடிமைகளாக இருப்பவர்களையும் மீட்கிறார் என்பதே கதை.

எடுத்தவுடன் கார் பந்தயம் போன்ற காட்சி, அனைவரும் காரில் இருந்து விஜய் வரப்போகிறார் என்று விசில் அடித்து உற்சாகமாக இருக்க, வெளியே வருவது விவேக், ரசிகர்கள் ஏமாற்றமாக, வந்த விவேக் விஜய் வருவதை பற்றி ஒரு பில்ட் அப் கொடுக்க, விஜய் வேறு இடத்தில், மூடி இருந்த தொட்டி விலகி அதில் இருந்து விஜய் தண்ணீருடன் பீச்சியடிக்க மேலே வருகிறார், யாருமே அதை ஒரு பரபரப்புடன் எதிர்பார்க்காததால் அவருடைய தொடக்க காட்சி சப்பென்று அமைந்து விட்டது.

பிறகு விஜய் தன்னுடைய ஓட்டை காருடன் (கிண்டல் செய்யவில்லை உண்மையிலேயே டப்பா கார் தான்) போட்டியில் கலந்து கொள்கிறார். அனைத்து கார்களும் கலக்கலாக இருக்க விஜயின் கார் மட்டும் காயலான் கடை கார் மாதிரி இருக்கிறது, அனைவரும் அதை கிண்டல் செய்ய விஜய் மௌனமாக போட்டி உடையில் போஸ் கொடுக்கிறார்

பின்னர் போட்டி ஆரம்பமாகி கார்கள் ஓட துவங்குகின்றன விஜயின் கார் பாகங்கள் ஒவ்வொன்றாக கழன்று கொள்ள, விடாமல் காரை ஓட்டுகிறார், பேனட், கதவு,பம்பர் என்று எல்லாமே கழண்டு விடுகிறது, கடைசியில் விசை மிதியும் உடைந்து போக அனைவரும் சிரிக்கிறார்கள், உடனே விஜய் அறுந்து போன கேபிளை வாயில் கடித்து இழுத்து வேகத்தை கூட்டி பறந்து சென்று (உணமையாகவே) முதலிடம் பிடிக்கிறார். பின்னர் போட்டியில கலந்துக்கிறது முக்கியம் இல்ல யாரு ஜெயிக்கறாங்க என்பது தான் முக்கியம் என்று யாருக்கோ சவால் விடுகிறார்.

அப்பாவின் பணத்தை வாங்க மலேசியா செல்லும் விஜய் சுமனின் தங்கை த்ரிஷாவை சந்திக்கிறார்

முதல் பாதியில் விஜய் ஒரு ஸ்பைடர் மேன் ஆகவே இருக்கிறார், பாதி நேரம் பறந்து கொண்டே இருக்கிறார், த்ரிஷா கீழே விழும் போது ரொம்ப ரொம்ப உயரமான கட்டிடம் பறந்து சென்று பிடித்து கயிறு மூலம் காப்பாற்றுகிறார் ஆனாலும் திரிஷா தண்ணீரில் விழுந்து விடுகிறார், விஜய் கண்ணை கட்டி கொண்டு இருந்த தால் அவரை கண்டு பிடிக்க சென்னை வருகிறார். அவருக்கு வேலை விஜய்யை துரத்துவது மட்டுமே. த்ரிஷா அழகாக இருக்கிறார்,

படத்தில் அனைவரும் விஜயை மாறி மாறி சுடுகிறார்கள் ஆனால் வேகமாக வரும் துப்பாக்கி குண்டை விட வேகமாக ஒதுங்கி தப்பித்துக்கொள்கிறார். சில குண்டுகள் அவரை தவிர மற்ற இடங்களில் துளைக்கிறது.

இவை எல்லாவற்றையும் விட கொடுமை ரசிகர்களே நொந்துபோனது இந்த காட்சி தான், விஜயை வில்லன்கள் துரத்தி வர அவர் ஓடி ஓடி மொட்டை மாடிக்கே வந்து விடுவார் அதற்கு பிறகு ஓட முடியாது வில்லன்கள் வேறு வந்து விடுவார்கள், தப்பிக்க என்ன வழி என்று பார்ப்பார் நமக்கு ஒன்றும் வழியில்லை என்று தோன்றுகிறது, விஜய் மேலே பருந்தை பார்க்கிறார் அல்லது கடவுளை பார்க்கிறாரா என்று சரியாக தெரியவில்லை, எதோ ஏடாகூடமாக நடக்க போகிறது என்று பார்த்தால் விஜய் அங்கே மாடியில் இருந்து தாவி சம்பந்தமே இல்லாத தூரத்தில் இருக்கும் மெட்ரோ ரயில் பாலத்திற்கு பறந்து தாவி பிடித்துக்கொள்கிறார். வில்லன்கள் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறார்கள். பின்னர் அதோடு நிற்காமல் பாலத்திலேயே ரயிலுக்கு இணையாக ஓடி ரயிலை பிடித்து ஏறி, அங்கே இருந்து வில்லன்களை பார்த்து விரலால் சுடுகிறார் அதோடு இடைவேளை. இப்படி ஒரு இடத்திலா இடைவேளை போட வேண்டும், அனைவரும் கிண்டல் செய்ய வசதியாக போய் விட்டது முன் வரிசையில் இருந்தவர் நான் கூட நேரா ரயிலுக்கு உள்ளேயே தாவி விடுவார் என்று நினைத்தேன் என்று கிண்டல் செய்ய அனைவரும் சிரித்து விட்டார்கள்.

இடைவேளை வரை, படத்தை ஓரளவிற்காவது காப்பாற்றுவது விவேக் தான், இல்லை என்றால் ரொம்ப கடுப்பாகி இருக்கும் என்பது என் தனிப்பட்ட கருத்து.

இடைவேளைக்கு பிறகு முழுவதும் ஆந்த்ரா கடப்பாவில் நடப்பதையே காட்டுகிறார்கள்,நமக்கும் வறண்ட இடத்தையே பார்த்து சலிப்பாகி விடுகிறது. இடையில் த்ரிஷா பாடலில் வந்து ஜில் சேர்க்கிறார். இதில் பலானது மற்றும் மொழு மொழுன்னு யம்மா யம்மா பாடலும் என்னவோ போல் உள்ளது கேட்க, விஜய் தனக்கு பெண் ரசிகைகளும் குழந்தை ரசிகர்களும் அதிகம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்த மாதிரி பாடல் வரிகளை தவிர்க்க வேண்டும்.

இடைவேளைக்கு பிறகு விவேக் இல்லை, படமும் வறட்சியாக போகிறது, திரிஷாவை தவிர்த்து. விஜய் வழக்கம் போல ஆட்டத்தில் பட்டய கிளப்புகிறார். நளினமான மற்றும் வேக ஆட்டத்தில் நான் தான் ராஜா என்பதை கூறாமல் ஆட்டத்தில் காட்டுகிறார். கடைசியில் அனைவரையும் கொன்று தன் அப்பாவையும் உடன் அடிமைகளாக இருக்கும் அனைவரையும் காப்பாற்றுகிறார் என்பதே முடிவு.

கில்லி என்று தாறுமாறான விறுவிறுப்பான படத்தை கொடுத்த இயக்குனர் தான் இதை இயக்கினார் என்று கூறினால் நம்ப முடியவில்லை. இப்ப தொலைக்காட்சியில் எந்த குழந்தையை கேட்டாலும் விஜய் தான் பிடிக்கும் என்று கூறுகிறார்கள். அதிக குழந்தை ரசிகர்களை கொண்டுள்ள விஜய் வன்முறை காட்சிகளை குறைத்து நடிக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

- கிரி

# சினித்துளி

## ஆட்டோகிராபில் கோபிகா இல்லை



ஆட்டோகிராப் படத்தின் 2ம் பாகத்தை எடுக்கவுள்ளார் சேரன். இதில் ஸ்னேகா, மல்லிகா ஆகியோர் கேரக்டர்களில் அவர்களே நடிக்கவுள்ளனர். ஆனால் கோபிகாதான், 2ம் பாகத்தில் நடிக்க முடியாது என்று கூறி விட்டார்.

பலமுறை சேரன் கோரியும் கல்யாணமாகப் போவதை காரணம் காட்டி நடிக்க மறுத்து விட்டார் கோபிகா.

இதையடுத்து சேரன் தற்போது உதயதாராவை அணுகியுள்ளார். கோபிகாவைப் போலவே முகவாகு இருப்பதால் தான் உதயதாராவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

இதுவரையில் உதயதாராவிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்காவிட்டாலும் சாதகமான பதிலே கிடைக்கும் என்ற நம்பிக்கையிலிருக்கிறார் சேரன்

*திருமணக்கனவில் இருப்பவரை நடிக்கக் கூப்பிட்டது சரியோ?*

## இனிமேல் சாக மாட்டேன்



பீமா படத்தில் நான் சாவது போல நடித்தது பலருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தி விட்டது. எனவே இனிமேல் இதுபோன்ற காட்சிகளில் நடிக்க மாட்டேன் என்று கூறியுள்ளார் திரிஷா.

சீயான் விக்ரமும், திரிஷாவும் நடித்த பீமா படத்தில், திரிஷாவை சுட்டுக் கொல்வது போன்ற காட்சி இடம் பெற்றிருந்தது. இது அவரது ரசிகர்களுக்கும், குடும்பத்தினருக்கும், தோழியருக்கும், நட்பு வட்டாரத்திற்கும் பெரும் அதிருப்தியைக் கொடுத்து விட்டதாம்.

இப்படியெல்லாமா நடிக்க சம்மதிப்பது, இனிமேல் இதுபோல நடிக்கக் கூடாது என்று அனைவரும் திரிஷாவை வலியுறுத்தினார்களாம். குறிப்பாக அவரது அம்மா உமாவுக்கு திரிஷாவின் இறப்புக் காட்சியைப் பார்த்து அழுகையே வந்து விட்டதாம். இதனால் இனிமேல் இறப்பது போன்ற காட்சியில் நடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளார் திரிஷா.

*டூயட் பாடுவியள் தானே?*

## நமீதாவிற்கு சண்டை பிடிக்க ஆசை



தமிழ் திரையுலகின் கவர்ச்சி புயல் நமீதாவிற்கு சண்டைக் காட்சியில் நடிக்க ஆசையாய் இருக்கிறதாம். இதோ அவரே சொல்கிறார்

நான் எல்லா படத்திலும் கவர்ச்சியாக நடிப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். நான் வேண்டுமென்றே அப்படி நடிப்பதில்லை. எனது உடல் தோற்றம் கவர்ச்சியாக இருப்பதால் அப்படி தெரிகிறது.

என்னைப் பொறுத்தவரையில் கண்ணீர் விட்டு அழுவது போல் நடிப்பதில் அவ்வளவாக விருப்பம் கிடையாது. காமெடி, ஆவேசமா சண்டை காட்சிகளில் நடிப்பதற்கு ஆசைப்படுகிறேன்.

படப்பிடிப்பு இல்லாத சமயத்தில் டிவி பார்த்து நேரத்தை வீணடிக்க மாட்டேன். அதற்கு பதிலாக நிறைய மனநலம் தொடர்பாக புத்தகங்கள் படிப்பேன் அதை படிக்கும்போது தானாகவே தன்னம்பிக்கை கிடைத்து விடுகிறது.

*வில்லன்கள் பாடு திண்டாட்டம் தான்*


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



**seven** | zero
graphic designers
**020 7043 4319**
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from **concept to design**